முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.231/2018

தேதி : 11–07–2025

(பி.வா.சா.1) – திரு.ரவி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையதானா என்றால் சரிதான். அநத் கையெழுத்து பத்திர அலுவலத்தில் வைத்துதான் போட்டேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள சாட்சி என் மனைவி என்றால் சரிதான். பணம் வாங்கிக்கொண்டு அந்த ஆவணம் எழுதப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியை எப்படி தெரியும் என்றால் அவருடைய இடம் என் இடத்திற்கு பக்கத்தில் உள்ளது மற்றும் ஆவண எழுத்தர் நடேசன், சுரேஷ் என்பவர்கள் மூலம் பழக்கம். இது அல்லாமல் 12.11.2016ல் வாதி என்னிடம் கிரைய ஒப்பந்தம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது பதிவு செய்யப்படவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தும், அடமான பத்திரத்தில் உள்ள சொத்தும் வெவ்வேறு என்றால் சரிதான். வரன்முறைப்படுத்த முடியாது மனை என்பதால் பதிவு செய்ய முடியாத நிலை இருந்ததால் கிரையம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். கிரைய செய்ய முடியாத காரணத்தினால் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் இல்லை, கிரைய ஒப்பந்தம்தான் முதலில் போடப்பட்டது.

2. ரூ. 4 லட்சத்திற்கு தற்போது வரை வாதிக்கு வட்டி கொடுக்கவில்லை என்றால் நான் ரூ. 4 லட்சத்தினை முன்பணமாக பெற்றேன், கடனாக பெறவில்லை, எனவே வட்டி செலுத்தவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சொத்தும், அடமான சொத்தும் வெவ்வேறு சொத்து என்பதால் கிரைய ஒப்பந்ததிற்கு பெறப்பட்ட தொகைக்காக செக்யூரிட்டியாக போடப்பட்டது தான் அடமான ஆவணம் என்று உண்மைக்கு மாறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல, கிரைய ஒப்பந்த தொகைக்காக தான் போடப்பட்டது. பதிலுரையில் மேற்படி ரூ. 4 லட்சத்தில் 2 லட்சம் ரூபாய் கொடுத்தாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றும், அப்படி 2 லட்சம்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3. சுபாஷ் சந்திரபோஸ், தனுஷ்கோடி என்பவர்கள் முன்னிலையில் 2 லட்சம் ரூபாய் கொடுக்கவில்லை என்றும், அவர்கள் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் அவர்கள் முன்னிலையில்கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை பொறுத்து அ.வ.எண்.26/2019 வழக்கு தாக்கல்செய்யப்பட்டு அது தள்ளுபடி ஆனது என்றும், அதை கோப்பிற்கு எடுக்க மனு செய்தும் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நானும், என் மனைவியிடம் வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு தற்போது அதை கொடுக்காமல் இருப்பதற்காக முன்பணத்திற்காக எழுதி கொடுக்கப்படடது என்று கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. பொறுப்பிற்காக கொடுக்கப்பட்ட ஆவணத்தை வைத்து வாதி உண்மைக்கு மாறாக வழக்கு தாக்கல் செய்கிறார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் இருப்பதால் எடுக்கவில்லை. வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.